JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.37/2021
PW.2

| பெயர் | குத்தாலிங்கம் | தாலுகா | தென்காசி |
|---|---|---|---|
| தந்தை பெயர் | பொன்னுசாமி | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | அரியப்பபுரம் | வயது | 60 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது அரியப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னுடன் வேலை செய்பவர். அசா.1 சண்முக கனி என்பவரை தெரியும். வழக்கில் இறந்து போன தளவாய்சாமி என்பவரை தெரியாது. சாட்சிகள் ராஜலிங்கம், மாரியப்பன் ஆகியோர்களை தெரியாது. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 5 வருடங்களுக்கு முன்பு காலை 7.30 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள சாஸ்தா கோவிலின் அருகே அரியப்பபுரத்தில் நான் வேலைக்கு ஆஜர் எதிரியுடன் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். இருசக்கர வாகனத்தை ஆஜர் எதிரி ஓட்டினார். அசா.1ன் அப்பா வண்டியின் குறுக்கே வந்து விழுந்து விட்டார். அவர் இறந்து விட்டார். போலிசார் என்னை விசாரித்தனர். எனக்கு கண்ணிற்கு கீழ் வலது தோள்பட்டை மற்றும் வாயில் காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 29.01.2020 ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் அரியப்பபுரத்திலிருந்து எல்லைபுளி செல்லும் மெயின் ரோட்டில் ஆஜர் எதிரியும் நானும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி TN67 AW6928 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தைஅதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும்,

கவனக்குறைவாகவும் ஓட்டி நடந்து சென்று கொண்டிருந்த தளவாய்சாமியின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.37/2021
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முககனி | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | தளவாய்சாமி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | அரியப்பபுரம் | வயது | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது அரியப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இருசக்கர வாகனத்தில் வந்து விபத்தை ஏற்படுத்தியவர். சாட்சிகள் குத்தாலிங்கம், ராஜலிங்கம், மாரியப்பன், ஆகியோர்களை தெரியும். வழக்கில் இறந்து போன தளவாய்சாமி என்அப்பா. கடந்த 29.01.2020 ம் தேதி காலை 7 மணி முதல் 7.30 மணிக்குள் அரியப்பபுரம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் என் அப்பா டீக்குடித்து விட்டு நடந்து சென்று கொண்டிருந்த போது என் அப்பாவிற்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக ஆஜர் எதிரி ஓட்டி வந்தார் அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் குத்தாலிங்கம் இருந்தார். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து என் அப்பா மீது மோதி விட்டார். என் அப்பா கீழே விழுந்ததில் அவருக்கு காதில் இருந்து இரத்தம் வந்தது. நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் என்னுடைய அப்பாவை அரியப்பபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் அங்கிருந்து 108 ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார்கள். வரும் வழியிலே என் அப்பா இறந்து விட்டார். பின்னர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க பாவூர் சத்திரம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான் மேற்படி புகார் மனு **அசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் அப்பா இறந்ததற்கு ஆஜர் எதிரி தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய காவல அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi